-

# 01. தௌஹித்-ரிஸாலத்-மஆத்

01. ஈமான் என்றால் என்ன?

வல்லமை நிறைந்த அல்லாஹ்வை உறுதியாக நம்புவது ஆகும்.

02. விசிவாசி என்ற சொல் அறபு மொழியில் எவ்வாறு அழைக்கப்படும்?

முஃமின்

03. ஈமானின் முக்கிய 3 பகுதிகளும் எவை?

1.தௌஹித் 2.றிஸாலத் 3.மஆத்

04. தௌஹித் என்பதன் பொருள் யாது?

ஏகத்துவம்

05. தௌஹித்தில் உள்ளடங்கும் 3 பகுதிகள் எவை?

1. தௌஹித் ருபூபிய்யா 2. தௌஹித் உலுஹிய்யா
3. அஸ்மா வஸ்ஸிபாத்

06. தௌஹித் ருபூபிய்யத் என்பது யாது?

பிரபஞ்சம் அனைத்தையும் அல்லாஹ் படைத்து பரிபாலித்து ஜிவராசிகளைப் போசித்து அவற்றுக்கு வாழ்வையும் மரணத்தையும் வழங்குகிறான். இச் செயற்பாடே ருபூபிய்யாகும்.

:- ருபூபிய்யா எனும் சொல் "ரப்" என்ற சொல்லில் இருந்து தோன்றியது.

-

07. ஜாஹிலியாக்கால அரபு மக்கள் தௌஹித்தின் எப்பகுதியை ஏற்றுக் கொண்டனர்?

தௌஹித் ருபூபிய்யா

“அவர்களிடம் நீங்கள் வானங்களையும் பூமியையும் படைத்தவன் யார் சூரியனையும் சந்திரனையும் வசப்படுத்தியவன் யார் என்று கேட்டால் நிச்சயமாக அல்லாஹ்வே என்று கூறுவார்கள்.(29:61)

08. தௌஹீதின் 2வது அம்சம் “தொஹீத் உலூஹிய்யா” இது இலாஹ் என்ற சொல்லில் இருந்து தோன்றியது.

“தொஹீத் உலூஹிய்யா” உள்ளடக்கியிருக்கும் கருத்துக்கள் யாவை?

1. வணங்கத் தகுதியானவன்.
2. பிரார்த்தனை புரியத் தகுதியானவன்.
3. வாழ்க்கைக்கான ஹலால்,ஹராம் சட்டங்களை வகுக்கத் தகுதியானவன்.
4. அன்பு வைக்கத் தகுதியானவன்.

09. ஜாஹிலிய்யாக்கால மக்கள் தௌஹீத்தின் எப்பகுதியை நிராகரித்தார்கள்?

தௌஹீத் உலூஹிய்யா

10. தௌஹீதின் 3வது பகுதி எது?

அஸ்மா வஸ்ஸிபாத்

-

11. அஸ்மாஉ என்றால் என்ன?

    அல்லாஹ்வுடைய அழகுத் திருநாமங்கள்.

12. ஸிபாத் என்றால் என்ன?

    அல்லாஹ்வின் தனித்துவ பண்புகள்.

13. றிஸாலத் எனப்படுவது யாது?

    தூதுத்துவத்தைக் குறிக்கும்.

14. றிஸாலத்தில் உள்ளடங்குபவை?

    வேதங்கள்

    சுஹுபுகள்

15. றிஸாலத் ஏன் வழங்கப்பட்டது?

    மக்களை நல்வழிப்படுத்த

16. நபிமார்களில் சிரேஷ்டமானவர்கள் யார்?

    றஸூல்மார்கள்

17. மஆத் எனப்படுவது யாது?

    மரணத்தின் பின்னுள்ள மறுமை வாழ்கையாகும்.

-

# 02. அஸ்மாஉல் ஹுஸ்னா

18. அல்லாஹ்வுக்கு அழகுத் திருநாமங்கள் உள்ளன என்பதை கூறும் அல்குர்ஆன் வசனம் யாது?

"அல்லாஹ் அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறுயாரும் இல்லை அவனுக்கு அழகான திருநாமங்கள் இருக்கின்றன"(20:8,17:110,59:24)

19. அஸ்மாஉல் ஹுஸ்னாபற்றிக் கூறும் ஹதீஸ் யாது?

"அல்லாஹ்வுக்கு 99 அழகுத் திருநாமங்கள் உள்ளன இவற்றை யார் மனனமிடுகின்றாரோ அவர் சுவனம் நுழைவார்" (புஹாரி)

20. நபி(ஸல்) அவர்கள் உறங்கச் செல்லும் போது எவ்வாறு பிரார்த்தித்துள்ளார்கள்?

'இறைவா! உனது திருப்பெயரால் தூங்கச் செல்கிறேன்

உனது திருப்பெயரால் உயிர் வாழ்கிறேன்'

21.'லப்ளுல் ஜலாலா' என்றழைக்கப்படும் அழகுத்திருநாமங்கள் எது?

அல்லாஹ்

-

22. அகீதா துறைசார் வல்லுனர்கள் அஸ்மாஉல் ஹுஸ்னாகளின் பொருளை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்திய 4 வகைகளும் எவை?
    1. அல்லாஹ்வின் படைப்புடன் தொடர்பானவை.
    2. அன்புடன் தொடர்பானவை.
    3. அல்லாஹ்வின் வல்லமையுடன் தொடர்பானவை.
    4. அல்லாஹ்வின் அறிவுடன் தொடர்பானவை.

## 3.மறுமை நாள்

23. நாம் ஈமான் கொள்ளவேண்டிய அம்சங்களுள் 5வது அம்சம் மறுமை நாள் பற்றியதாகும். அல்குர்ஆன் மறுமையைச் சுட்ட பயன்படுத்தும் சொற்பதங்கள் யாவை?

    யவ்முல் ப:.ஸ் , யவ்முத் தீன்
    யவ்முல் ஹிஸாப் ,யவ்முத் தஆபுன்
    யவ்முல் கியாமா யவ்முல் ஆகிரா

24. மறுமை நம்பிக்கை இல்லாத ஒருவனிடம் காணப்படும் இயல்புகள் எவை?
    1. மனம் போன போக்கில் வாழ முற்படுவான்
    2. மார்க்கப் போதனைகளையும் ஒழுக்கப்பண்புகளையும் புறக்கணிப்பான்
    3. அவனது வாழ்வு மிருக வாழ்வு போன்று ஆகிவிடும் மனிதனது மனிதத்துவத்தை இழந்துவிடுவான்.

-

25. மறுமை நம்பிக்கை இழக்கப்படும் போது மனித சமூகத்தில் உதாசீனம் செய்யப்படும் செயற்பாடுகள்?

    சுத்தியம், நீதி, நியாயம், தர்மம் , வாக்குறுதி காத்தல் , பொது நலன் பேணல்

26. மறுமை நம்பிக்கையுடன் தொடர்பான நிகழ்வுகள் யாவை?

    ப.ஃ.ஸ்,ம.ஃ.ஷர்,ஹிஸாப்,ஹவ்ழுல் கவ்சர்,சிராத்

27. ப.ஃ.ஸ் எப்போது நிகழும்?

    இஸ்ராபீல் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப்படி முதலாவது சூர் ஊதியதும் அனைத்தும் அழிந்துவிடும் மீண்டும் நீண்ட இடைவெளிக்குப் பின் இரண்டாவது சூர் ஊத மரணித்த அனைவரும் ஊயிர்கொடுத்து எழுப்பப்படுவர் இதுவே ப.ஃ.ஸ் ஆகும்

28. ம.ஃ.ஷர் எனப்படுவது யாது?

    -ஒரு திறந்த வெளி ஆகும்

29. ம.ஃ.ஷரில் மக்கள் எப்போது ஒன்று கூட்டப்படுவார்கள்?

    -2வது சூர் ஊதப்பட்டதும்

30. ஷபாஅதுல் குப்ரா என்றால் என்ன?

    -பெரிய மன்றாட்டம்

31. ஹிஸாப் என்றால் என்ன?

    -மறுமை நாள் விசாரணை

-

32. மீசான் எனப்படுவது யாது?

 -மறுமையில் செயல்கள் நிறுக்கும் தராசு

33. ஹவ்ழுல் கவ்சர் தடாகம் யாருக்கு உரியதாகும்?

 -நபி (ஸல்) அவர்களுக்குரியது

 இது பாலை விட வெண்மையானது

 தேனை விட இனிமையனது

 குஸ்தூரியை விட சுகந்தமானது

34. ஸிராத் எனப்படுவது யாது?

 -நரகின் மேலால் போடப்படும் பாலம்

### 4.சுவர்க்கம்- நரகம்

35. சுவனத்துக்குரிய பெயர்கள் யாவை?

 -ஜன்னதுல் பிர்தௌஸ் ,ஜன்னதுல் மஃவா

 -ஜன்னதுல் அத்ன் , ஜன்னதுன் நயீம்

 -தாறுல் ஸலாம் , தாறுல் ஹுலுத்

 -தாறுல் முகாமா

36. மிகவும் உயர்ந்த சுவனம் எது?

 -ஜன்னதுல் பிர்தௌஸ்

37. இதில் நுழைபவர்கள் யார்?

 -நபிமார்கள் ,ஸித்தீக்கீன்கள் ,ஸுகதாக்கள்

-

-சுவனத்து உணவுகளாக?

புலவகைப் பழங்களும் ,பறவைகளின் மாமிசங்களும்

-சுவனவாசிகளின் ஆடைகள்?

பட்டினால் ஆன ஆடைகள்

-ஆபரணங்களாக?

தங்கத்தினாலும் முத்துக்களாலான ஆபரணங்கள் வழங்கப்படும்

இவர்களுக்கே உரிய பெரிய இன்பமாக அல்லாஹ்வைக் கண்களால் காண்பார்கள்.

38. நரகின் பெயர்கள் எவை?

நார், சார் ,ஜஹீம், ஜஹன்னம், லழா, ஹாவியா, ஸகர் ,ஹுதாமா,வைல்

39. நரகாவாசிகளின் உணவுகள் யாவை?

-கசப்பான துர்வாடை வீசும் ஸக்கூடம் எனும் ஒருவகைத் தாவரம் ஆகும்

40. பானங்கள் யாவை?

-கொதிக்கும் நீரும் சீழும் ஆகும்.

41. சுவனம் செல்லத் தடையாக அமையும் சமூக விரோதச் செயற்பாடுகள் யாவை?

குப்ர்,பொய், ஏமாற்றுதல் ,அசத்தியம் ,கொலை ,கொள்ளை

வாக்குமீறுதல் ,மோசடி செய்தல், துரோகம்

-

# 5. அல் - கழாஉவல் கத்ர்

42. அல்-கலா கத்ர் என்பதன் பொருள் யாது?

-முன்னளப்பு ,விதி

43. விரிவான கருத்து யாது?

-கழா என்பது அல்லாஹ் அவனது அறிவுக்கும் நாட்டத்திற்கும் ஏற்ப பிரபஞ்ஞுத்தையும் அதிலள்ளவற்றையும் படைத்துள்ளான்.

(முடிவுசெய்யப்பட்டது)

குத்ர் என்பது படைப்புக்கள்ஒவ்வொன்றும்எப்பொழுதுஎவ்விடத்தில் ஏத்தகைய தோற்றங்களையும் உள்ளார்ந்த ஆற்றல்களையும் கோண்டதாக இருக்கும் என்பது பற்றிய அல்லாஹ்வின் அறிவு.

44. பின்வரும் அறபுச் சொற்களுக்குரிய கருத்தைத் தருக?

1.ஸிபாத் -அல்லாஹ்வுக்குரிய பண்புகள்

2.இல்ம் - முழுமையான அறிவு

3.இறாதத் - பரி பூரணநாட்ட சக்தி

4.குதறத் - நிறைவான இயக்கசக்தி

5.அதில் - நடுநிலையான நீதி

-

45. லவ்ஹுல் மஹ்புல் எனப்படுவது யாது? அல்குர்ஆன் வசனம் ஒன்றை ஆதாரமாகத் தருக?

“இன்னும் பூமியிலோ வானத்திலோ உள்ளவற்றின்ஓர்அணுவும் உமதிரட்சகனுக்குத் தெரியாது மறைந்து விடுவதில்லை இன்னும் இவற்றை விட சிறிதோ பெரிதோ அவனுடைய தெளிவான லவ்ஹுல் மஹ்பூல் எனும் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை. (10:61)

46. கழாகத்ர் செயற்படும் விதங்கள் எவை?

1. முழுமையாகவே அல்லாஹ்வின் அறிவிற்கும் நாட்டத்திற்கும் ஏற்ப நடைபெறுவதாகும். இதில் மனிதனுக்கு எத்தகைய பங்குமில்லை அவனின் விருப்பு வெறுப்புக்கு இடமில்லை.
2. இப்பகுதி மனித சுதந்திரம் அவனின் விறுப்பு வெறுப்புடன் தொடர்பு பட்டது மனிதன் அல்லாஹ்வால் அறிவூட்டப்பட்ட நாட்டசக்தி வழங்கப்பட்ட படைப்பு ஒன்றாகும்.

47. கழா கத்ரை நம்புவதால் மனிதனுக்குக் கிடைக்கும் நன்மைகள் எவை?

1. அல்லாஹ் அழித்தவற்றில் திருப்திகண்டுவாழ வழிவகுக்கும்.
2. ஆக்க வேலைகளில் ஈடுபட ஆத தூண்டல் செய்யும்.
3. அபாயகரமான சந்தர்ப்பங்களில் துணிச்சலோடு செயற்பட வாய்ப்பாக அமையும்.
4. தீமைகளை எதிர்ப்பதில் உறுதியாக இருக்கச்செய்யும்.
5. துன்பங்கள் துயரங்களின் போது பொறுமையை கைகொள்ளச் செய்யும்.

-

# 6. ஜனாபத்திலிருந்து சுத்தம் பெறுவோம்.

48. ஜனாபத் எனும் அறபுச் சொல்லின் கருத்து யாது?
    -தொடக்கு

49. அல் -ஹதஸுல் அக்பர் என்பது யாது?
    -பெருந்தொடக்கு

50. ஜனாபத்தை ஏற்படுத்தும் காரணிகள் யாவை?
    1. முஸ்லிம் மரணமடைதல்.
    2. தூக்கத்தில்/விழிப்பில் இந்திரியம் வெளியாதல்.
    3. ஆண் பெண் உடலுறவு கொள்ளுதல்.
    4. ஹைழ் ஏற்படுதல்.
    5. நிபாஸ் ஏற்படுதல்.

51. ஆண்கள் பருவவயதை அடைவதற்கு அறிகுறியாக விந்து வெளியாவதாகும்.
    -பெண்கள் பருவவயதை அடைவதற்கு அறிகுறியாக ஹைழ் எனும் உதிருப்போக்கு ஏற்படுகிறது.

52. ஹைழ் நிகழும் கால அளவுகள்
    -குறைந்தது ஒரு நாளிள்
    -ஆகக் கூடியது 15 நாட்கள்
    -பொதுவாக ஒருவாரமாகும்

53. நிபாஸ் என்றால் என்ன?
    பிரவசத்தின் போது ஏற்படும் உதிரப்போக்கு

-

54. இதன் கால அளவுகள்

-குறைந்தது ஒரு வினாடி

-ஆகக்கூடியது 60 நாட்கள்

-பெரும்பாலும் 40 நாட்களிள் நின்றுவிடும்

55. ஜனாபத் உடையோர் செய்யக்கூடாதவைகள்?

1. தொழுதல்
2. பள்ளியில் இ.ஃ.திகாப் இருத்தல்.
3. க.ஃ.பாவை தவாப் செய்தல்.
4. அல்குர்ஆன் ஓதுதல்.,தொடுதல் சுமத்தல்

56. எமது பாலுறுப்பிலிருந்து மதி,வதி,சிறுநீர் வெளியானால்

-இவை அசுத்தமானதாகும் இவற்றைக்கழுவிக் கொண்டால் போதுமானது.

57. கடமையான குளிப்பின் நிபந்தனைகள்?

1. மிகச்சுத்தமான நீரைப்பயன்படுத்தி குளித்தல்
2. நீர்ப்படுவதைத் தடுக்கக்கூடிய பொருட்கள் உடம்பில் இல்லாதிருத்தல்.

58. கடமையான குளிப்பின் பர்ளுகள்.?

1. பர்ளான குளிப்பை நிறைவேற்றுகிறேன். என நீய்யத் வைத்தல்.
2. உடல் முழுவதும் சுத்தமான நீரினால் கழுவுதல்.

-

60. கடமையான குளிப்பின் ஸுன்னத்துக்கள்.?

1. குளிக்குமுன் சிறுநீர் கழீத்தல்.
2. உடம்பில் படிந்திருக்கும் அசுத்தங்களை அகற்றுதல்.
3. இரு கைகளையும் மணிக்கட்டுவரை கழுவிக்கொள்ளல்.
4. வாய் கொப்பளித்து நாசிக்கு நீர் செலுத்துதல்.
5. பற்களை துலக்குதல்.
6. வுழு செய்தல்.
7. உடல் முழுவதையும் தேய்த்து குளித்தல்.